**செய்தி வெளியீடு எண் : 1535** **நாள் : 01.08.2023**

# மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் அரசு முறை பயணமாக கனடா நாட்டின், ஒட்டாவா மாகாணத்தில் கனடா அரசால் பராமரிக்கப்பட்டு வரும் மேஜர் கில் பார்க் பூங்காவை பார்வையிட்டார்

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் அரசு முறை பயணமாக 30.07.2023 அன்று கனடா நாட்டிற்கு வருகை தந்து, ஒட்டாவா மாகாணத்தில் கனடா அரசால் பராமரிக்கப்பட்டு வரும் மேஜர் கில் பார்க் பூங்காவை பார்வையிட்டார். அச்சமயம் பூங்காவில் உள்ள புராதான சின்னங்களின் விவரங்களையும் மற்றும் அங்கே பூங்கா பராமரிப்பில் எந்த வகையான இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன மற்றும் பூங்காவின் அமைப்பு, இந்த பூங்காவில் உள்ள பல்வேறு வகையான மரங்கள் மற்றும் பூச்செடிகளின் விவரங்களையும் கேட்டறிந்தார்.

31.07.2023 அன்று கனடா நாட்டின் தலைநகரான ஒட்டாவா மாகாணத்தில் உள்ள இந்திய தூதரகத்திற்கு சென்று, அங்கு கனடா நாட்டின் இந்திய தூதர் மேதகு திரு. சஞ்சய் குமார் வர்மா, இ.அ.ப., அவர்கள், கனடா நாட்டின் விவசாய வளங்களை பற்றியும் கனடா நாட்டில் பயன்படுத்தப்படும் உயரிய வேளாண் உற்பத்தி தொழில்நுட்பங்களையும் அங்கு அறுவடைக்கு பின் செய் நேர்த்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி போன்றவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் கனடா நாட்டிற்கு சென்று பல்வேறு வேளாண் உத்திகளை கண்டறியும் வகையில் மாணவர்கள் பரிமாற்றம் தொடர்பாகவும், விவசாயிகளுக்கு தரமான உரம் விநியோகிக்கும் வகையில் ஆராய்ச்சி செய்வது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், ஒட்டாவா மாகாணத்தில் கார்சொனோபி கிராமத்திற்கு சென்று, அங்கு சோயா மொச்சை மற்றும் மக்காச்சோளம், கோதுமை, ஓட்ஸ் பயிர்களையும் மற்றும் பழவகைகள் பயிரிடுவதையும் பார்வையிட்டார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களும் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர். பிருந்தா தேவி, இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வி.கீதாலட்சுமி மற்றும் வேளாண் பல்கலைக்கழக இயக்குநர்கள் உடன் இருந்தனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in